# 4C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. இயல் 4A.1 க்கு உரிய அறிமுகத்தில் பல திறவுக் குறிப்புகளும் முன்வைப்புகளும் பட்டியலிடப்பட்டுள்ளன (சம வாய்ப்பு, பால் சமத்துவம், சனநாயகக் கல்வி, பன்முகத்தன்மை விருப்பு, முதலியன), இவை தொடர்பாக புலம்பெயர் நாடுகளில் ஒரு பரந்த ஒருமித்த கருத்து உண்டு. பின்வரும் முன்மொழிவுகளின் (அ) உங்கள் நாட்டுப் பண்பாட்டின் கல்வி அமைப்பில் (ஆ) தற்போது நீங்கள் வாழ்கின்ற கற்பிக்கின்ற நாட்டின் இன்றியமையாமை மற்றும் நடைமுறைப்படுத்தல் பற்றிய உங்கள் பட்டறிவு எவ்வாறிருக்கும் என்பதைத் உருக்காட்டிக் கலந்துரையாடுக.

2. உங்கள் பிறப்பு மற்றும் கல்வி தொடர்பாக, புலம்பெயர் நாட்டுச் சூழலில் எத்தகைய திறப்புக் குறிப்புகளை, கோட்பாடுகளை, முன்வைப்புகளை தக்கவைப்பீர்கள் மற்றும் நடைமுறைப்படுத்துவீர்கள்?

3. இயல் 4A.1 இலுள்ள முன்வைப்புகள் பட்டியலை மீண்டுமொரு முறை மீளாய்வு செய்க. இவற்றை எதிர்கொள்வதற்கு உங்கள் வகுப்பறைக் கற்பித்தலில் நீங்கள் என்ன செய்யலாம்? நீங்கள் ஏற்கனவே என்ன செய்துள்ளீர்கள் வேறு என்ன முடியக்கூடியனவாய் உள்ளன? முடியின், அடுத்த மூன்று முதல் நான்கு கிழமைகளுக்கு உருப்படியான கற்றல் வாய்ப்புகளைத் தொழில்தோழருடன் திட்டமிடுக.

4. எல்லாப் பிள்ளைகளுக்கும் சம வாய்ப்பு அல்லது நிகரான வாய்ப்பு பற்றி பகுதி A யிலும் இயல் 4B.1இலும் குறிக்கப்பட்டுள்ளது. தற்போது நீங்கள் பா.மொ.க ஆசிரியராகப் பணிசெய்யும் நாட்டில் இச்சூழலை நீங்கள் எவ்வாறு உணர்ந்துகொள்வீர்கள்? எங்கு சிக்கல்களை மற்றும் முன்னேற்றத்துக்கான தேவையினைக் காண்கிறீர்கள்? இது தொடர்பாக தனிப்பட்ட முறையில் நீங்கள் என்ன பங்களிப்பினைச் செய்யமுடியும்? நிறைவாக, உங்களுடைய பிறப்பு நாட்டில் சம வாய்ப்பு வேண்டுகை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது?

5. சனநாயக கல்வி பற்றிய இயல் 4A.3 ஐ தயவாக மீண்டுமொரு முறை மீளாய்வுசெய்க. வடிவமைக்கப்பட்ட இலக்குகள் – எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்கள் சனநாயகவாதிகளாக மற்றும் சனநாயகத்தை மதிக்கும் மக்களாகுதற்குப் பயிற்சி – இயல்பாக இவையும் பா.மொ.க வின் அக்கறைக்கு உட்பட்டனவே. உங்கள் கற்பித்தல் பாங்கு மற்றும் உங்கள் உள்ளடக்கத் தெரிவு தொடர்பாக இந்த இலக்குக்கு நீங்கள் என்ன பங்களிப்பினை செய்கிறீர்கள் என்பது பற்றி விளக்கிக் கலந்துரையாடுக. அடுத்துவரும் சில கிழமைகளில் இவ்விலக்குகளுக்குப் பங்களிக்கக்கூடியதான இரண்டு அல்லது மூன்று உருப்படியான வகுப்பறைச் சூழல்களை உங்கள் தொழில்தோழர்களுடன் திட்டமிடுக.

6. சனநாயகக் கல்விக்கான ஐரோப்பியப் பேரவையின் கருவிகளை இணையத்தில் மீளாய்வு செய்க (இணைப்புகளுக்கு நூற்பட்டியலைப் பார்க்கவும்). அடுத்த சில கிழமைகளில் உங்கள் வகுப்பறையில் உங்கள் கற்பித்தலுக்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் நீங்கள் என்ன பயன்படுத்துவீர்கள்?

7. இயல் 4A.5 "கற்பித்தல் மற்றும் கற்றல் ஒரு கூட்டுச் சிக்கல் தீர்க்கும் செயல்முறை" என்னும் தலைப்பையுடையது. இத்தலைப்பு (இது, அதேவேளை, ஒரு முன்வைப்புமாகும்) உங்களுக்கு என்ன பொருளைத் தருகிறது? உங்கள் கற்பித்தல் தொடர்களில், மாணவர்களுடன் கூட்டாக ஒரு சிக்கலை அணுகியமை அல்லது உங்கள் மாணவர்களை குறிப்பாக கவருகின்ற, சவால்நிறைந்த ஒரு சிக்கலில் ஈடுபட வைப்பதில் வெற்றிகண்டமை அல்லது ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு அவர்களைப் பயன்படுத்தியமை பற்றிக் கலந்துரையாடுக. இத்தகைய பிற கற்றல் வாய்ப்புகளைத் தொடர்ந்து திட்டமிடுக!

8. இயல்கள் 4B.2 இலும் 4B.3இலும் "பால் சமத்துவம்" மற்றும் "பல்பண்பாடு" பற்றிய கோட்பாடுகள் பற்றி இரண்டு பாடத்திட்டங்களைக் காண்பீர்கள். இவ்விரு திட்டங்களையும் பற்றிக் கலந்துரையாடுக. உங்களுடைய வகுப்பறைக்கு இவ்விரு இன்றியமையாத தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு திட்டங்களை ஆக்கலாம் என்பதை கருத்தில் கொள்க.

II